களுக்கு லோன் தருவதில்லை. இலவசமாகத்தான் வழங்கப் பட்டு வருகிறது. நலிவுற்ற பெண்கள், விதவைப் பெண்கள் என்கின்ற அடிப்படையில் 40 வயதுக்கு உட்பட்டவர்களுக்குத் தான் இதுவரையில் சமூக நலத்துறையில் அப்ளை செய்து வாங்கி இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 16, டாக்டர் அ. ஸ்ரீதரன் மாண்புமிகு வனத்துறை அமைச்சர்.

16—

கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றும் திட்டம்.

*20056—டாக்டர் அ. ஸ்ரீதரன்:
மாண்புமிகு வனத்துறை அமைச்சர்: கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை வனக்கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோவை தென்னிந்திய வனச்சரகர் கல்லூரியை வால்பாறைக்கு மாற்றுவதற்கு செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை மதிக்க முடியாத வைரத்தை பித்தளையில் பதித்து அழகு பார்ப்பதைவிட, தங்கத்தில் பதித்து அழகு பார்த்தால்தான் தங்கத்துக்கும் மதிப்பு அந்த வைரத்திற்கும் மதிப்பு. அதைப்போல கோவை மாநகரத்தினுடைய மத்தியில் இருக்கக்கூடிய வனக் கல்லூரியை வால்பாறை மலைப்பகுதியும் வனமும் நிறைந்த பகுதிக்கு மாற்றினால்தான் வால்பாறையினுடைய வனத்திற்கும் வனப்பு; வனக் கல்லூரிக்கும் வனப்பு. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் சிறப்பானது. ஆனால் இந்தக் கல்லூரியை சுமார் 75 ஆண்டுக்காலம் 1987 வரை மத்திய அரசு நடத்தி வந்தது. அதற்குப்பிறகு மத்திய அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து இதை மாநில அரசே நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். மீண்டும்

மத்திய அரசு அந்தக் கொள்கையை மறுபரிசீலனை செய்து மத்திய அரசே நடத்துவதாக மாநில அரசுக்கு எழுதி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மத்திய அரசு இந்தக் கல்லூரியை எடுத்து நடத்த நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு இசைவு அளித்துள்ளது என்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினருடைய கேள்விக்கு உதவ முடியவில்லை என்பதை மெத்த பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17, திரு. தா. வேடியப்பன், மாண்புமிகு கல்வி அமைசசர்.

17—

அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் அமைத்தல்.

*21323—திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் : கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் வட்டம் அத்திமூர் கிராமத்தில் கிளை நூல் நிலையம் ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. பொன்னுசாமி கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) மற்றும் (ஆ) —இல்லை.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வேட்பாளராக இருந்த நாள்முதல் என்னுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவியின் மீது திருவண்ணாமலை அருணாசல ஈஸ்வரர் ஆலயத்தில் என் தாய்மீது என்றென்றும், மாதந்தோறும் அர்ச்சனை செய்த அந்த திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் ஆலயத்திற்குத் தங்கத் தேர் வழங்கிய என்னுடைய இதய தெய்வம் அவர்களுக்கு, புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி).

அதே நேரத்தில், போளூரிலே உள்ள என்னுடைய சொந்தக் கிராமமான, நான் பிறந்த மண்ணின் அத்திமூர் கிராமத்தில் கிளை நூலகம் கேட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சரவர்கள் மறு பரிசீலனை செய்து, எங்களுடைய திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலே அறிவொளி இயக்கத்தைப் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். கல்வி அறிவு பெற வேண்டும் ; . பிற்படுத்தப்பட்ட மக்களெல்லாம் கல்வியறிவு பெற